**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 30 /2023**

**Deposition of P .W.1- வர்க்கீஸ்**

**Dated:20.02.2026**

**<u>3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்துபோன என் மகன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அப்படி சொல்கிறார்கள். முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்தேன். முதல் தகவல் அறிக்கையில் எனது மகனின் அதிவேகமும், அஜாக்கிரதையும் விபத்திற்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என் மகன் வேகமாக செல்லமாட்டான். முதல் தகவல் அறிக்கையில் என் மகன் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை. எனமு மகன் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் 3வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மகன் தான் விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை வைத்திருந்தார். 20.12.2022ம் தேதி என் மகன் TN 75 P 5159 வாகனத்தை விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். விபத்து 30.12.2022ம் தேதி என்று சொன்னால் சரிதான். விபத்து பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. என் மகன் மீது தவறு இல்லை என்று சம்மந்தப்பட்ட காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. காவல்துறை கண்காணிப்பாளருக்கு கொடுத்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் மகன் தலைக்கவசம் அணிந்திருந்தால் விபத்தில் காயம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. எனது மகனின் வருமானத்தை காட்ட சட்டபடியான ஆவணம்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகனின் வருமானத்தை அதிகமாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. TN 75 U 4882 வாகனத்தின் காப்பீடு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1வது எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்திற்கு காப்பீடு கிடையாது என்றால் சரியல்ல. 3வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 1வது எதிர்மனுதாரர் இருசக்கர வாகனம் பதிவு செய்யப்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் மகன் ஓட்டி வந்த வாகனம் விபத்தில் சம்மந்தப்பட்டதால் என் மகன் 3ம் தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7ல் 1வது எதிர்மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு 3வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு வழங்கவேண்டுமென்று சொன்னால் சரிதான். 3வது எதிர்மனுதாரர் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றும், அவருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.